<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>

அ.வ.எண்.404/2020 வா.சா.1 தட்சிணாமூர்த்தி

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 10.07.2025

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

7) இவ்வழக்கில் என் சாட்சிய வாக்குமூலத்தை எனக்காகவும், எனது மனைவிக்காகவும் சேர்த்துதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மாண்புமிகு பொள்ளாச்சி சார்பு நீதிமன்ற அ.வ.எண்.191/2011 வழக்கின் வழக்கு சொத்துக்களை நான்கு அயிட்டாங்களாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்துக்களை அ, ஆ என இரண்டு அட்டவணை சொத்துக்களாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வழக்குரை என்னால் மேற்படி அ.வ.எண்.191/2011 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரை என்றால் சரிதான். ( **அ.வ.எண்.191/2011 வழக்குரை சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

8) பி.வா.சா.ஆ.1 வழக்குரையின் 11 ம் பக்கத்தில் 4 ம் அயிட்ட சொத்தில் *" தற்கால சப்டிவிசன்படி க.ச.எண்.935/A1 ல் கட்டுப்பட்டது"* என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கு வழக்குரையில் க.ச.எண்.935/A1 -ல் கட்டுப்பட்டது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.வ.எண்.191/2011 வழக்கில் வழக்கறிஞர் திரு.ஜம்புலிங்கம் அவர்கள் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்டு வழக்கு சொத்துக்களை பார்வையிட்டு அளந்து அறிக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். (**அ.வ.எண்.191/2011 வழக்கின் நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் முறையே சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ-2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகின்றன.**) மேற்படி பி.வா.சா.ஆ.2 ஆணையர் அறிக்கையிலும் பி.வா.சா.ஆ.3 வரைபடத்திலும் அவ்வழக்கு சொத்துக்கள் 4

அயிட்ட சொத்துக்களும், க.ச.எண்.935/A2 -ல் கட்டுப்பட்டதாக குறிப்பிட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு நான் ஆட்சேபனை தாக்கல் செய்தேனா என்றால் உடல் நலம் குறைவு காரணமாக நான் நீதிமன்றத்திற்கே போகவில்லை. அந்த அறிக்கை எனக்கு கொடுக்கப்படவில்லை. உடல் நலம் குறைவு காரணமாக நான் நீதிமன்றத்திற்கே போகவில்லை என்று இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றும், அந்த ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் எனக்கு எதிராக இருந்ததால் தற்போது இவ்வாறு பொய் கூறுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

9) வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.6 கிரையப்பத்திரங்கள்படிதான் வழக்கு எனக்கு பாத்தியப்பட்டதாக கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவண சொத்துக்களில் எனக்கு இருந்த பாதி பாத்தியத்தை என் மனைவிக்கே ஆவண எண்.5023/2019 -ல் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். (**செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் தற்கால சப்டிவிசன் க.ச.எண்.935/A1 ல் கட்டுப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை நான் எனது தரப்பு ஆவணமாக குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் சப்டிவிசன் எண் தவறாக உள்ளதாக நானே என் மனைவி பெயருக்கு ஆவண எண்.1526/2020-ல் ஒரு பிழைத்திருத்தல் ஆவணம் ஏற்படுத்தினேன் என்றால் சரிதான். (**பிழைத்திருத்தல் ஆவணம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பி.வா.சா.ஆ.5-ல் பிழைத்திருத்தலுக்கு முந்தைய சொத்து விபரம் என குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் தற்கால சப்டிவிசன் க.ச.எண்.935/A1- ல் கட்டுப்பட்டது என்ற வாசகம் இடம் பெறவில்லை என்றால் முந்தைய ஆவணத்தில் இருந்தபடியே

குறிப்பிடப்பட்டுள்ளது.

10) பி.வா.சா.ஆ.1 வழக்குரையில் 8 ம் பத்தியில் *"... அதில் ஓர் பகுதியான ஆனைமலை க.ச.935/A2 ல் எல்லைகளை மாறுதல் செய்து 2 ஆம் பிரதிவாதிக்கு கடந்த 24.11.2011-ல் ஆனைமலை சார்பதிவகத்தில் 1598/2011 ஆம் எண்ணாகப் பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் மூலம் கொடுத்ததாக பத்திரம் பதிவு செய்துள்ளார்"* என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் என் முன் பாத்தியஸ்தரிடம் பிழைத்திருத்தல் ஆவணம் ஏதேனும் பெற்றேனா என்றால் இல்லை.

11) க.ச.எண்.935/A2 இறந்த 1ம் பிரதிவாதிக்குதான் பாத்தியப்பட்டிருந்தது என்றும், இறந்த 1ம் பிரதிவாதிதான் 2ம் பிரதிவாதிக்கு ஆதரவாக செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியுள்ளார் என்றும், அதன் அடிப்படையில் அச்சொத்து 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. க.ச.எண்.935/A2 எப்போதுமே பிரதிவாதிகள் அனுபவத்தில்தான் இருந்து வந்தது என்றும், வாதிகள் ஆகிய எங்கள் ஒருபோதும் இருந்ததில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

12) வா.சா.ஆ.10 மனு இரசீது தேதியில் பிரதிவாதிகளும், காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். எனது மனுவையும், அவர்களது மனுவையும் DRO விசாரணைக்கு அனுப்பினார்கள் என்றால் சரியல்ல. DRO விசாரணை நிலுவையில் இருந்தபோதே நான் இவ்வழக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல.

13) வா.சா.ஆ.14 பட்டா பிரதிவாதிகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அதனை அளவையர் மூலம் அளந்து ஏற்படுத்தியதால் அது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தும். நான் க.ச.எண்.935/A1 சொத்தை கிரையம் பெற்றுவிட்டு தவறுதலாக பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.935/A2 சொத்தில் வீடு கட்டி ஆக்கிரமிப்பு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளின் சொத்தை அபரிக்கவே இவ்வழக்கை

தாக்கல் செய்துள்ளேன் என்றும், உண்மையிலேயே அச்சொத்து எனக்கு பாத்தியப்பட்டிருந்தால் விளம்புகை பரிகாரம் கோரி அ.வ.எண்.191/2011 வழக்கையே மேற்கொண்டு நடத்திருப்பேன் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தை சுற்றியுள்ள சொத்துக்களை குறைந்த விலையில் கிரையம் பெறவே இதுபோன்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளவாறு எந்த முறைகேடான செயல்களிலும் பிரதிவாதிகள் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 முதல் வா.சா.ஆ.13 ஆவணங்கள் ஆகியவற்றில் தவறான க.ச.எண் குறிப்பிடப்பட்டுள்ளதால் அவை பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் முகாந்திரம் இல்லாததாலும் சொத்து விபரம் தவறாக உள்ளதாலும், இவ்வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.